பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை 04.11.2022 கதிர் 251

## சேந்தாங்குளம் கடற்கரையில் 60 கிலோ கேரள கஞ்சா மீட்பு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், சேந்தாங்குளம் கடற்கரையில் இருந்து 60 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப் (2)

## நிரந்தர அரசியல் தீர்வைக் காண முன்

# பிளவுண்ட தமிழ்ப் பிரதிநிதிகள் ஓரணியில் இணைய வேண்டும்

### அமைச்சர் நிமால் இப்படிக் கோரிக்கை



**வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தயாராகவுள்ளது.** (2)

## நெடுங்கேணியில் கைக்குண்டு மீட்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி, ஒலுமடுப் பகுதியில் வீதியோரமாக உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற நபர் ஒருவர் குறித்த வீதியோரத்தில் கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நெடுங்கேணி பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் (2)

## கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு எங்களுக்கு வேண்டும்

### நெடுங்கேணியில் மக்கள் போராட்டம்

(வவுனியா நிருபர்)

'கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' எனும் தொனிப் பொருளில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பால் வவுனியா, நெடுங்கேணி – சேனைப்புலவு (2)




## கொழும்பு போராட்டம் மாபெரும் வெற்றியாம்

### இப்படி மார்தட்டுகின்றார் சஜித்



அரசின் அனுமதியின்றி அல்லது பொலிஸாரின் அனுமதியின்றி பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்த முடியாது என்ற கருத்தை முற்றாக மாற்றியமைக்க 'நவம்பர் 02' கொழும்பு (8)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் காணிகளை அரசு அபகரிக்கத் துணைபோகின்றார் பிள்ளையான்

### சாணக்கியன் பகிரங்கக் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்ற பெயரில் காணிகளை அபகரிக்கும் அரசின் செயற்பாடுகளுக்குப் பிள்ளையான் துணைபோகின்றார் என்று தமிழ்த் தேசியக் (8)

## மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை

### ரணிலின் கருத்துக்கு சஜித் பதில்

இலங்கையில் மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'நாட்டில் மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் எதற்கு? ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்பதை எதிரணியினர் புரிந்து கொள்ள வேண்டும்' (8)

## காணாமல் ஆக்கப்பட்டோர் எவரும் உயிரோடு இல்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



காணாமல் ஆக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு. அதனால்தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு (2)

## திலினியின் மோசடி; ஜானகியும் கைது!



திலினி பிரியமாலியின் நிதி மோசடியுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ஜானகி சிறிவர்தன இன்று காலை (2)

## ஐஸ் போதைப்பொருள் வியாபாரி சிக்கினார்!



மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேசத்தில் வசிக்கும் பிரபல ஐஸ் போதைப் பொருள் (2)

## விடுதலைப் புலிகள் சரணடையவில்லை

### இராணுவம் மீண்டும் மறுப்பு



இறுதிப் போர்க் காலப் பகுதியில் இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப்புலிகள் எவரும் சரணடையவில்லை என்று தகவல் அறியும் ஆணைக்குழு முன்பாக இராணுவம் (8)

## களனி பல்கலையில் வெறியாட்டம்; 5 மாணவர்கள் வைத்தியசாலையில்



களனி பல்கலைக்கழக விடுதி ஒன்றில் மாணவர்கள் குழு ஒன்று தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் குழு ஒன்று கன்னங்கர விடுதியில் இரண்டாம் வருட மாணவர்கள் குழு ஒன்றைத் தடுத்து (2)

## களனி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து பல மணிநேரம் தாக்கியுள்ளது என்று கூறப்படுகின்றது.

சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டனர் எனக் கூறி 5 மாணவர்கள் ஹோமா கம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஹோமா கம பொலிஸார் தெரிவித்தனர்.

கலைப்பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் 5 மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்

அரநாயக்க, கலவான, பரகடுவ, வத்தேகம மற்றும் கஹவத்த பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்களே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐஸ் போதை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரி (வயது 28) கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு அரபா நகரில் வைத்து 16 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டார்

காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கதிரவெளி விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருளை விற்பனைக்குக் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த ஒரு தொகைப் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் நீண்டகாலமாக மிகவும் சூட்சுமான முறையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவர் கொழும்பிலிருந்து மொத்தமாக ஐஸ் போதைப்பொருளைக் கொண்டு வந்து விற்பனை செய்து வந்துள்ளார்.

இவரைப் பல்வேறு தடவைகளில் கைது செய்ய முயற்சித்தும் சாதுர்யமாகத் தப்பித்து வந்த நிலையிலேயே நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## நெடுங்கேணியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணையுடன் கைக்குண்டை மீட்டெடுத்ததுடன், அதைச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தக் கைக்குண்டானது யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஜே.ஆர். வகைக் குண்டு என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## காணாமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் துயரங்களை – உணர்வுகளை நாம் புரிந்துகொள் கின்றோம். அவர்களை நாம் மதிக்கின்றோம்.

உறவுகளைத் தொலைத்த துயரத்திலும் அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற ஏக்கத்துடனும் வாழும் குடும்பங்கள் நீதி கேட்டு அரசுக்கு எதிராகப் போராடுவதில் நியாயம் இருக்கின்றது. ஆனால், அவர்களை வைத்து தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமது சுயலாப அரசியலை மேற்கொள்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு. இதை அவர்களின் குடும்பத்தினரிடம் கூறினால் அவர்கள் ஏற்கத் தயாரில்லை. நாம் என்ன செய்வது?

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டுதான் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது –என்றார்.

## சேந்தாங்குளம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. இன்று காலை இராணுவத்தினர் இதைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து ஓர் இரகசியப் படகு வருகின்றது எனக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் சேந்தாங்குளம் கடற்கரையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதே மேற்படி 60 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## பிளவுண்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு முன்னர் பிளவுபட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் சங்கமிக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷ அரசு வேறு. ரணில் அரசு வேறு. தற்போது ஆட்சியில் இருப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு.

இந்த ஜனாதிபதியும் சரி, இந்த அரசில் உள்ளவர்களும் சரி தமிழ் மக்களின் அனைத்துப்பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வுகாணத் தயாராகவுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இந்த அரசுடன் நெருங்கிச் செயற்படுகின்றனர். இன்னொரு பகுதியினர் இந்த மீது நம்பிக்கை வைக்கத் தயங்குகின்றனர். மற்றொரு பகுதியினர் தங்களுக்கிடையிலான கட்சி ரீதியிலான மோதலால் ஒதுங்கி நிற்கின்றனர்.

பிளவுபட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் இணைந்தால்தான் அரசுடன் திறந்த மனதுடன் பேசி தீர்வு காண முடியும் – என்றார்.

## கௌரவமான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்று வரும் நூறு நாள் செயற்றிட்டத்தில் 96 ஆவது நாளான இன்றைய போராட்டத்தில் தமது கோரிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக மக்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் நிறுத்து, வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஓர் ஜனநாயக உரிமை உள்ளிட்ட பல வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## திலினியின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – கோட்டையில் உள்ள அலுவலகத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

ஜானகி சிறிவர்தன பிரபல வர்த்தக குழுமம் ஒன்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராக அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜனாதிபதியின் திரிப்பு

விடயங்களைத் தங்கள் விருப்பு, வெறுப்புக்கு ஏற்ற மாதிரி திரிப்பதுதான் அரசியல்வாதிகளின் கைவண்ணம்.

இலங்கையின் மூத்த அரசியல்வாதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதில் விதிவிலக்கல்லர். கைதேர்ந்தவர்தான்.

இப்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் அப்படி ஒரு திரிப்பை அவர் அவிழ்த்துவிட்டு இருக்கிறார்.

நேற்று முன்தினம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட்ட கட்சிகள் தலைநகர் கொழும்பில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் மூலம் இரும்புக் கரம் கொண்டு தடுத்து நிறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை ஒட்டி ஒரு கேள்வியை எழுப்பி இருக்கின்றார். அதில்தான் அவரது அரசியல் திரிப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டு மக்கள் விரும்பிய மாற்றம் வந்துவிட்டது, அதன் பின்னர் ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் எதற்கு என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் அவர்.

அவரின் கருத்துப்படி பார்த்தால், இந்த ஆண்டு ஆரம்பம் முதல் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தியமை – அறகல்ய போராட்டம் – காலி முகத்திடலில் பகல், இரவாக இடம் பெற்றவை – எல்லாம் ஒரே நோக்கத்துக்கானவை. அது, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து வீட்டுக்கு அனுப்புவதுதான். அது நடந்து முடிந்து விட்டது. இனி ஏன் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் எல்லாம் என்பதுதான் அவர் கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிந்தும் தெரியாதவர் மாதிரி நடிக்கின்றாரா அல்லது உண்மையில் புரியாமல்தான் இப்படிப் பேசுகின்றாரா என்று கேள்வி எழுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கி, நாட்டைச் சூறையாடிய அரசியல்வாதிகள் எல்லோரையும் அதிகாரத்தில் இருந்து கலைப்பதற்காகத்தான் மக்கள் அப்படி ஒன்று திரண்டு, கெம்பி எழுந்து, வந்து போராட்டம் நடத்தினார்கள்.

போராட்டத்தின் பயனாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பி ஓடிப் பதவியைத் துறந்தார். அது முக்கியமான – பிரதானமான – விடயம்தான்.

ஆயினும், நாட்டைச் சூறையாடிய மற்றைய பிரதான தரப்புக்கள் எல்லாம் இன்றும் பதுங்கி இருக்கின்றன. மீண்டும் பதவிக் கதிரையைப் பிடித்து, அடுத்த சுற்று நாட்டைச் சூறையாட அவை பதுங்கிக் காத்திருக்கின்றன என்பது தெளிவு.

அவற்றுக்கு இடம் அளித்தால் மீண்டும் மக்கள் எழுச்சி, கிளர்ச்சி, போராட்டம் மோசமாக வெடிக்கும் என்ற யதார்த்தம் புரிந்தமையால்தான், தமக்குள்ள கடுமையான அழுத்தத்துக்கும் மத்தியிலும், அமைச்சரவை மறுசீரமைப்பைச் செய்யாமல் காலத்தை இழுத்தடித்து, ஒளித்துப் பிடித்து விளையாடி வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரை மீறி அந்தத் தரப்புக்கள் அரசுக்குள் வலுவாகக் காலூன்றும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

அந்நிலைமை புரிந்தும் கூட, புரியாத மாதிரி நடித்து, ஏன் ஆர்ப்பாட்டங்கள் என்று பொருத்தமற்ற கேள்வியை எழுப்புகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது எல்லோருக்கும் புரியும் விடயம்தான்.

# இ.தொ.கா. தலைமையகத்துக்கு ஜப்பான் தூதுவர் நேற்று விஜயம்





இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயத்துக்கு ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் அவரது பாரியார் வருகை தந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்தனர்.

தலைமை காரியாலயத்தில் உள்ள மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடைய உருவப் படத்திற்கு மாலை அணிவித்தனர்.

மேலும் மறைந்த தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் காலம் முதல் இன்று வரை இ.தொ.காவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவு தொடர்பாகவும் இ.தொ.கா செய்து வரும் சேவைகள் பற்றியும் இதன்போது ஜப்பான் தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ், மூத்த அரசியல்வாதி மதியுகராஜா, இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் மரயா சக்தி மற்றும் கட்சியின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அனர்த்த முன்னெச்சரிக்கைகள் தொடர்பாக மன்னார் ஊடகவியலாளர்களுக்கு கருத்தமர்வு



அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் அனர்த்த குறைப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விசேட கருத்தமர்வு மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைத்தல் பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று (வியாழக்கிழமை) மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது. இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டு கருத்தமர்வை ஆரம்பித்து வைத்தார். இந்தக் கருத்தமர்வில் அனர்த்தம் ஏற்படும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாகவும் குறிப்பாக ஊடகவியலாளர்களின் பங்களிப்பு பற்றியும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. திலீபன், மன்னார் மத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.யோகராஜன், மன்னார் மாவட்ட கடற்தொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர் பவாநிதி ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டார் அமைச்சர் டக்ளஸ்!



யாழ்ப்பாணம், மட்டுவிலில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் கட்டுமான வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் நேற்று (வியாழக்கிழமை) அங்கு சென்று பணிகளைப் பார்வையிட்டனர்.

20 கோடி ரூபா நிதி ஒதுக்கீட் டில் 20 வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள வியாபார மத்திய நிலையத்தை விவசாயிகளுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் வினைத்திறனாக செயற்படுத்துவது தொடர்பாக துறைசார்ந்த அலுவலர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதன்போது யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாயிகள், சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக பிரதிநிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# சீனாவின் 23 ஆயிரம் கிலோ ராக்கெட் பூமியை நோக்கி வீழ்வதால் பேரச்சம்!

## எங்கே விழும் என்று தெரியாத இக்கட்டு



பீஜிங்,நவ.04

சீனாவின் 23 ஆயிரம் கிலோ எடை கொண்ட ராக்கெட் ஒன்று பூமியை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கின்றது. அது எந்த இடத்தில் விழும் என தெரியாது என்று சீனா கை விரித்து விட்டது.

சீனாவின் தெற்கே வென்சாங் பகுதியில் இருந்து, 23 ஆயிரம் கிலோ எடை கொண்ட ராக்கெட் ஒன்று கடந்த மாதம் 31 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. அதில், சீனாவின் கட்டுமானப் பணியில் உள்ள டியான்காங் விண்வெளி நிலையத்திற்கு தேவையான மெங்சியான் என்ற உபகரணங்களின் தொகுதி புவி வட்டபாதைக்கு அனுப்பப்பட்டது. இதன்பின்னர், அந்த ராக்கெட் மீண்டும் பூமியை நோக்கி விழுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 'லாங் மார்ச் 5பி' என்ற அந்த ராக்கெட் பூமியின் எந்த பகுதியில் சரியாக விழும் என்ற விவரங்களை சீனா உறுதி செய்யவில்லை.


இந்த ராக்கெட் மீண்டும் பூமிக்கு திரும்பும்போது, வளிமண்டலத்தில் எரிந்து சாம்பலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், கடந்த காலத்தில் சீன ராக்கெட் குப்பைகளில் சில முழுவதும் எரியாமல், அதன் பாகங்கள் பூமியில் விழுந்த அதிர்ச்சிகர சம்பவங்கள் நடந்து உள்ளன. இந்த முறை மீண்டும் அதுபோன்ற சம்பவம் நடக்க கூடிய சாத்தியம் உள்ளது என விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி விண்வெளி கழகத்தின் தலைமை பொறியியலாளர் அலுவலகத்தின் ஆலோசகர் டெட் மியூல்ஹாப்ட் கூறும்போது, சீனா மீண்டும் இதுபோன்று செயல்படுகிறது. இதனால், 88 சதவீத உலக மக்களின் வாழ்க்கை பேராபத்தில் உள்ளது. சீனாவின் விண்வெளிக் குப்பைகள் பூமியில் விழும் சூழலில், 700 கோடி மக்கள் பேராபத்தில் உள்ளனர்"– என தெரிவித்து உள்ளார். எனினும், தனிநபர் என வரும்போது, இது மிக சிறிய அளவிலான ஆபத்தே என விண்வெளி கழகத்தின் நிபுணர்கள் குழு தெரிவித்து உள்ளது.

இதற்கு முன்பு இதேபோன்று சீன ராக்கெட்டின் மீதமுள்ள பாகங்கள் மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. ராக்கெட் எந்தப் பகுதியில் பூமியில் விழும் என்பது பற்றிய சரியான தகவல்களை சீனா தெரிவிக்கவில்லை என அப்போது, மேற்கத்திய மற்றும் ஆசிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பணவீக்கத்தை கட்டுப்படுத்த அமெ. கடன் வட்டி வீதங்களை உயர்த்தியது




வொஷிங்டன், நவ.04

அமெரிக்காவில் கடன்களுக்கான வட்டி விகிதம் 0.75 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளன. அத்துடன், முக்கிய வட்டி விகிதங்கள் மேலும் உயர்த்தப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. அமெரிக்காவில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்க மத்திய வங்கியின் நோக்கம் அதிகபட்ச வேலை வாய்ப்பு மற்றும் பணவீக்கத்தை நீண்ட காலத்திற்கு 2 சதவீதத்தில் அடைவதாகும் என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் நுகர்வோர் பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது ஓகஸ்ட் மாதம் 8.3 சதவீதமாக இருந்தது.எனினும் பணவீக்கம் 2 சதவீதத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை விட அதிகமாக உள்ளது, இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அமெரிக்க மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வட்டி விகிதம் 3.75 சதவீதம் என்ற நிலையிலிருந்து 4 சதவீதம் வரை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 2008க்கு பின்,அதிகபட்ச வட்டி விகித உயர்வாக இது பார்க்கப்படுகிறது.

வட்டிவிகிதங்களைஉயர்த்துவது ஒருபணவியல்கொள்கையாகும். இந்த நடவடிக்கை பொருளாதாரத்தில் தேவையை குறைக்க உதவுகிறது.அதன் மூலம் பணவீக்க விகிதம் குறைய உதவுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனிலிருந்து 1.4கோடி மக்கள் இடம்பெயர்வு என ஐ.நா. அறிக்கை



நியூயோர்க், நவ.04

உலகம் முழுவதும் 10 கோடிக்கும் மேற்பட்டோர் அகதிகளாக இருக்கின்றனர் என ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஆணையர் பிலிப்போ கிராண்டி கவலை தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இருந்து அகதிகளாக ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தில் பிலிப்போ கிராண்டி கருத்து வெளியிட்ட போது உக்ரைன் போர் பெப்ரவரி மாதம் தொடங்கப்பட்டதிலிருந்து,இதுவரை 14 மில்லியன் உக்ரேனியர்கள் ரஷ்யப் படையெடுப்பிற்குப் பிறகு தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.



கடந்த ஆண்டுகளில் இத்தகைய அதிக எண்ணிக்கையிலான பொது மக்கள் இடம்பெயர்வு நடப்பது இதுவே முதல் முறை. உக்ரேனியர்கள் உலகின் மிகக் கடுமையானகுளிர்காலங்களில் ஒன்றை இந்த ஆண்டு எதிர்கொள்ள உள்ளனர். உக்ரைனில் இடம்பெயர்ந்த மக்களுக்குஉதவுவதில் எங்கள் கவனம் அதிகரித்து வருகிறது. உக்ரைனின் அண்டை நாடான மோல்டோவாவில்,அதன்பாதிப்பைக் கருத்தில் கொண்டு சிறப்புக்கவனம்தேவை.

மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தில், திறந்த, சிறந்த நிர்வாகத்திறன் கொண்டு அகதிகளை அனுமதித்துள்ளனர். மனிதாபிமான நிறுவனங்கள் தங்கள் பங்காற்றலை இன்னும் அதிகரிக்க வேண்டும்.

உக்ரைனின் உள்கட்டமைப்புகளில் தாக்குதல் அதிகரித்துள்ளதால், மனிதாபிமான நிறுவனங்கள் ஆற்றும் உதவி பெருங்கடலில் சிறு துளி போன்றது என்று அவர் கூறியுள்ளார்.



# வாடகைக் காரில் குழந்தையைப் பெற்ற தாய்க்கு அபராதம் விதித்த கார் நிறுவனம்

லண்டன், நவ.04

இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்த 26 வயதுடைய பெண்ணொருவர், நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவத்தன்று வழக்கமான பரிசோதனைக்காக அந்தக் கறுப்பு இனப் பெண் வாடகைக் காரில் ஆஸ்பத்திரிக்கு சென்று கொண்டிருந்தார்.

கார் மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு திடீரெனபிரசவவலிஏற்பட்டது.இதையடுத்து அந்தப் பெண் காரிலேயே அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அதன் பின்னர் கார் ஆஸ்பத்திரி சென்றடைந்ததும் அங்கு தயாராக இருந்த வைத்தியர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் தாயையும், சேயையும் மீட்டு சிகிச்சை அளித்தனர்.

தற்போது இருவரும் நலமாக உள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஓடும் காரில் குழந்தை பெற்றெடுத்தபோது காரில் ஏற்பட்ட அசுத்தத்தை காரணம் காட்டி அந்தப் பெண்ணுக்கு வாடகை கார் நிறுவனம் அபராதம் விதித்துள்ளது.

காரில் ஏற்பட்ட அசுத்தத்தை சுத்தம் செய்ய 60 பவுண்டுகள் செலுத்த வேண்டுமென அவருக்கு அந்த வாடகை கார் நிறுவனம் தகவல் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கான மசகு எண்ணை ஏற்றுமதியில் ரஷ்யாவே முன்னிலை




புதுடெல்லி, நவ.04

இந்தியாவுக்கு அதிக அளவில் மசகு எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகள் பட்டியலில் ரஷ்யா முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதம் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு கொள்முதல் செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு 2.4 வீதம் குறைந்து, 8 லட்சத்து 55 ஆயிரத்து 950 பரல்களாக இருந்தது.

அதே நேரத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு அதிக அளவில் மசகு எண்ணெய் விநியோகம் செய்ததில் ஈராக் முதல் இடத்தையும், சவுதி அரேபியா 2ஆவது இடத்தையும் தக்க வைத்துக் கொண்டன. இந்நிலையில், ஒக்ரோபர் மாதம் மசகு எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு 22 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதன்மூலம், ஈராக்(20.5 வீதம்), சவுதி அரேபியா(16 வீதம்) நாடுகளின் பங்களிப்பை ரஷ்யா முந்தியதன் காரணமாக இந்தியாவிற்கு மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் வரிசையில் ரஷ்யாவிற்கு முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஒக்ரோபர் மாதம் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு கொள்முதல் செய்யப்பட்ட மசகு எண்ணெயின் அளவு ஒருநாளைக்கு 9 லட்சத்து 46 ஆயிரம் பீப்பாய்களாக உள்ளது. 2021இல் இந்தியாவுக்கான மசகு எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யாவின் பங்கு ஆக ஒரு வீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்போடியாவில் சிக்குண்ட அறுவர் தமிழகம் மீண்டனர்



மீனம்பாக்கம், நவ.4

தமிழகத்தைச் சேர்ந்த வாலிபர்கள், கம்போடியா நாட்டில் தகவல் தொழில் நுட்ப வேலைகளுக்கு என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சட்டவிரோத வேலைகளைச் செய்ய சொல்லி கட்டாயப்படுத்தப்படுகின்றனர் எனவும், மீறினால் தாக்கப்படுகின்றனர் எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கம்போடியாவில் சிக்கித் தவிப்பவர்களை மீட்க வேண்டும் என அவர்களது குடும்பத்தினர் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தமையை அடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் இந்திய தூதரகம் மூலமாக கம்போடியா நாட்டு அரசுடன் பேசி முதற்கட்டமாக 6 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கம்போடியாவில் இருந்து தாய்லாந்து வழியாக சென்னை விமான நிலையம் வந்த 6 பேரையும் தமிழக வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஆணையாளர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் 6 பேரும் சொந்த ஊர்களுக்கு வாகனங்களில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது தொடர்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறியதாவது:–

தமிழர்கள் வாழ்வாதாரம் தேடி பல்வேறு நாடுகளுக்கு செல்கின்றனர். கம்போடியா நாட்டுக்குச் சென்ற 6 பேரும் தங்களுக்குச் சொன்ன வேலையைத் தரவில்லை எனவும், சட்டவிரோத வேலையைக் கொடுத்து அதை செய்ய மறுத்ததால் துன்புறுத்தப்படுகின்றனர் எனவும் அவர்களது குடும்பத்தினர் மூலமாக முதலமைச்சர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்து அவர்கள் மீட்கப்பட்டு கம்போடியா நாட்டில் இருந்து அவர்கள் வீடு செல்லும் வரை விமான கட்டணம் உள்பட அனைத்து செலவுகளையும் அரசு ஏற்றது.

போலி முகவர்களை நம்பி வெளிநாடு சென்று ஏமாறாதீர்கள். வெளிநாட்டுக்குச் செல்ல விரும்பினால் எந்த நாட்டுக்கு? என்ன வேலை? என்பதை அயலக நலத்துறையில் பதிவு செய்து விட்டு செல்ல வேண்டும். ஆசை வார்த்தைகளை நம்பி செல்ல வேண்டாம். மேலும், குவைத் நாட்டில் சிக்கி தவித்த 36 பேர் மீட்டு வரப்பட்டுள்ளனர். முகவர்கள் (ஏஜெண்டுகள்) மீது புகார் செய்து உள்ளனர். உள்துறை மூலமாக விசாரித்து போலி முகவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# முயல் வேட்டையில் ஈடுபட்ட 6 பேர் கைது ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம்!



களக்காடு, நவ.04

நாங்குநேரி அருகே உள்ள தாழைகுளத்தில் ஒரு கும்பல் முயல் வேட்டையில் ஈடுபடுவதாக களக்காடு வனத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குனர் ரமேஷ்வரன் உத்தரவின் பேரில் களக்காடு வனச்சரக அலுவலர் மற்றும் வனவர் உள்ளிட்ட வன ஊழியர்கள், வேட்டை தடுப்பு காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சோதனை நடத்தியுள்ளனர்.

அப்போது முயல்களை நாய்கள் மூலம் வேட்டையாடி கொண்டிருந்த கும்பல் வனத்துறையினரைப் பார்த்ததும் தப்பி ஓடியது. இருப்பினும் வனத்துறையினர் 6 பேரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

பணகுடி அருகே உள்ள கடம்பன் குளத்தை சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஆறு பேருக்கும் தலா ரூ.20 ஆயிரம் என மொத்தம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் தப்பி ஓடிய 14 பேரை வனத்துறையினர் தீவிரமாக தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா முழுவதும் 2020-2021 இல் 20ஆயிரம் பாடசாலைகள் மூடுவிழா!



*புதுடெல்லி,நவ.04*

*இந்தியா முழுவதிலும், 2020-2021 கல்வி ஆண்டில் 20 ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன எனவும், கற்பிக்கின்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மத்திய கல்வி அமைச்சகம், புதிய தேசிய கல்வி கொள்கைக்காக திரட்டிய பள்ளிக்கல்வி தொடர்பான புள்ளிவிவரங்களுடன் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.*

*அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,:-*

*2020-2021 கல்வி ஆண்டின் தொடக்கத்தில் நாடு முழுவதும் 15 லட்சத்து 9 ஆயிரம் பள்ளிகள் இருந்தன. அடுத்த கல்வி ஆண்டு தொடங்கும்போது, 14 லட்சத்து 89 ஆயிரமாக குறைந்து விட்டது. அதாவது, பள்ளிகள் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கு மேல் குறைந்துள்ளது. தனியார் பள்ளிகள் மூடப்பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.*

*2020-2021 கல்வி ஆண்டின் தொடக்கத்தில், 97 லட்சத்து 87 ஆயிரம் ஆசிரியர்கள் இருந்தனர். அடுத்த கல்வி ஆண்டு தொடங்கும்போது, அவர்கள்எண்ணிக்கை 95 லட்சத்து 7 ஆயிரமாக குறைந்து விட்டது. அதாவது, 1.95 சதவீத ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.*

*நாட்டில் 44.85 சதவீத பள்ளிகளில் மட்டுமே கணினி வசதி உள்ளது. அதிலும், 34 சதவீத பள்ளிகளில் மட்டுமே இணைய இணைப்பு உள்ளது. 27 சதவீத பள்ளிகளில் மட்டுமே மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக தனிக் கழிப்பறை உள்ளது. அவற்றில் 49 சதவீத பள்ளிகளில் மட்டுமே கைப்பிடியுடன் கூடிய சாய்வுப்பாதை உள்ளது.*

*மேலும், கொரோனாவால் மாணவர் சேர்க்கை தள்ளிப் போடப்பட்டதால்,நலிந்தகுடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் சேர்வது குறைந்து விட்டது. குறிப்பாக, 2020-2021 கல்வி ஆண்டில் 19 லட்சம் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்துள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# கல்முனை சந்தான்கேணி மைதானக் காணியில் ஆக்கிரமிப்பைத் தடுக்க விரைவான நடவடிக்கை

## மாநகர சபையில் விசேட ஆலோசனைக் கூட்டம்





(செயிட் ஆஷிப்)

கல்முனை சந்தான்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானக் காணியில் தனி நபர்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நிலப் பகுதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான விசேட ஆலோசனைக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ரெஷான் அக்தர், எம்.எஸ்.எம்.நிஸார், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ். எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை சந்தான்கேணி விளையாட்டு மைதான எல்லைகளில் இடம்பெறும் அத்துமீறல்கள், அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் போன்ற விடயங்களை தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இம்மைதானக் காணியின் எல்லைப்பகுதிகளில் கடந்த 25 வருடங்களுக்கு மேலான காலப் பகுதிகளில் தனி நபர்களின் அத்துமீறல்கள் காரணமாக அதன் பரப்பளவானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருப்பதாகவும் இயற்கையாக நீர் வடிந்தோடும் கால்வாய் கூட அடைக்கப்பட்டிருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

காலாகாலமாக மிகவும் சூட்சகமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வந்துள்ள மைதானக் காணியின் எல்லைப் பகுதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை மிகவும் இறுக்கமாக முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்திருக்கின்ற நபர்களை விரைவாக கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்து, தேவையான அறிவுறுத்தல்களையும் உத்தரவுகளையும் வழங்குவதற்கும், இணக்கப்பாட்டுக்கு முன்வரத் தவறுகின்ற ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களும் விளையாட்டுத்துறை முக்கியஸ்தர்களுமான பெஸ்டர் றியாஸ், எம்.ஐ.எம்.அப்துல் மனாப் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு ஆலோசனைகளை முன்வைத்திருந்தனர்.

மைதான விடயத்தில் கரிசனையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற மாநகர முதல்வர் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் இந்நடவடிக்கைகளில் தளர்வுகள் ஏற்பட இடமளிக்காமல் உறுதியாக நின்று, எதிர்கால சந்ததியினருக்காக இம்மைதானத்தை பாதுகாத்துக் கொடுப்பதற்கு தொடர்ந்தும் முன்னிற்க வேண்டும் எனவும் இதன்போது பெஸ்டர் றியாஸ் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். இதற்காக விளையாட்டுக் கழகங்கள் அனைத்தும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவிருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, விளையாட்டு மைதானத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட மாநகர முதல்வரும் அதிகாரிகளும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் நிலைமைகளை ஆராய்ந்தமையுடன் அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கான அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாநகர முதல்வர் வழங்கியுள்ளார்.

# போதைவஸ்து விழிப்புணர்வு செயலமர்வு மாணவர்களுக்கு!

## கல்லடியில் காத்தான்குடிப் பொலிஸாரால்



(பழுவூரான்)

காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய மாணவர்களுக்குப் 'போதைவஸ்து சிறுவர் பாதுகாப்பு' எனும் தொனிப் பொருளில் மாணவர்களை விழிப்பூட்டும் கருத்தரங்கு நேற்று முன்தினம் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி வசந்தி ஜெயந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான பெண் கான்ஸ்டபிள் ஜெயசுதா விளக்கமளித்தார். மாணவர்கள் தங்கள் பாதுகாப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும், குறிப்பாக நீங்கள் வாகனங்களில் பயணம் செய்யும் போதும், அன்றாடம் பயணிக்கும் இடங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொலிஸ் சார்ஜன்ட் எம்.எஸ். எம். ஜின்னா, பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# ஒலியமடுக் குடியிருப்புக்குள் யானை புகுந்து அட்டகாசம்!

## மக்கள் தினசரி பீதியில் வாழ்க்கை

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒலியமடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு குடியிருப்புக்குள் புகுந்த காட்டுயானை, வீடு ஒன்றை உடைத்து சேதமாக்கியதுடன், அந்தப் பகுதியில் இருந்த தென்னை மரங்கள் மற்றும் மரவள்ளி, வாழை போன்ற பயிர்களையும் சேதமாக்கியுள்ளது.

இதனால் இரவில் உயிரைப் பணயம் வைத்து வாழவேண்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஒலியமடு பிரதேசத்தில் பயிர்ச் செய்கையை வாழ்வாதாரமாகக் கொண்டு 200 குடும்பங்களுக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் தினமும் காட்டு யானைகள் குடியிருப்புக்குள் புகுந்து அங்கு பயிரிடப்பட்டுள்ள பயிர்களை சேதமாக்கி வருகின்றன.

இந்த யானை தொல்லையினால் மாணவர்கள் கல்வி கற்கமுடியாமல் இரவில் பீதியுடன் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர் எனவும், இது தொடர்பாக அதிகாரிகளுக்குப் பலமுறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமது உயிரையும், உடமைகளையும் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் குறித்து ஆராய அமைச்சர்கள் குழு விஜயம்




கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் ஆராய அமைச்சர்கள் குழு கள விஜயம் ஒன்றை நேற்று (வியாழக்கிழமை) மேற்கொண்டிருந்தது.

இதன் போது கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டதுடன், வர்த்தகர்களுடன் கலந்துரையாடி இருந்தனர். தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் வர்த்தகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர். மேலும் இந்த விஜயத்தில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அமைச்சர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கபிதிகொல்லேவயில் சாவடைந்த பொலிஸ் அதிகாரிக்கு பதவியுயர்வு!



கபிதிகொல்லேவயில் இடம்பெற்ற போராட்டத்தின்போது, உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட் அகம்பொடிகே சுனிலுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அகம்பொடிகே சுனிலுக்கு பொலிஸ் சார்ஜன்ட் பதவியில் இருந்து உப பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு வழங்க பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கபிதிகொல்லேவ, ரம்பகெப்பு குளம் பகுதியில் கடந்த 31 ஆம் திகதி மதியம் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பிரதேசவாசிகள் சிலர் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்தச் சென்ற கபிதிகொல்லேவ பொலிஸ் சார்ஜன்ட் பிரதேசவாசிகளின் தாக்குதலில் உயிரிழந்தார்.

மேற்படி அதிகாரியின் இறுதிக் கிரியைகள் வாரிய பொல சுமங்கல பொது மயானத்தில் பூரண பொலிஸ் மரியாதையுடன் நடைபெற்றன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் தீயினால் ஏற்பட்ட சேத இழப்பீட்டை தீர்மானிக்க குழு நியமனம்

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் தீயால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் சேதம் மற்றும் மீனவர்களுக்கு எவ்வாறு இழப்பீடு வழங்குவது என்பதைத் தீர்மானிக்க சட்டமா அதிபர் தலைமையில் குழுவொன்றை நியமிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கப்பல் தீ விபத்துக்குள்ளானதால், ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு பெற்றுத் தருமாறும் பொறுப்பான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது சுற்றாடல் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் தெரிவித்தார்.

இதனையடுத்தே, மீனவர்களுக்கு எவ்வாறு இழப்பீடு வழங்குவது என்பதைத் தீர்மானிக்க சட்டமா அதிபர் தலைமையில் குழுவொன்றை நியமித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனம் இலங்கைக்கான தனது சேவையை ஆரம்பித்தது!

ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனம் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, ரஷ்யாவின் மிகப்பெரிய தனியார் விமான சேவையான 'அஸூர் எயார் இன் விமானம் நேற்று (வியாழக்கிழமை) காலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

335 பயணிகளுடன் மேற்படி விமானம் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் நாட்டின் தேசிய விமான நிறுவனமான 'எயார் பிரான்ஸ்' இன்று முதல் விமான சேவையை ஆரம்பிக்கும் என சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்துள்ள இந்த விமானங்கள் வாரந்தோறும் சேவையில் ஈடுபடும் என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கல்முனை ஷாஹிராவில் கணித முகாம்






(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சின் ஜெம் செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை ஷாஹிரா தேசிய பாடசாலையின் கணித முகாம் நிகழ்வுகள் கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றன.

உள்ளக நிகழ்வுகள், வெளியக நிகழ்வுகள், மேடை நிகழ்வுகள் என மூன்று கட்டங்களாக நடைபெற்ற இம்முகாமில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளரும், உதவிக்கல்வி பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக் கலந்து கொண்டார்.

மேலும் கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். சஞ்சீவன், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. இலங்கநாதன், பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.எச்.எம்.அபூபக்கர், ஏ.எச்.எம். அமீன், கணிதபாட இணைப்பாளர் ஏ.எச்.எம். றிஸான், கல்லூரியின் கணிதபாட ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பு போராட்டம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின் மூலம் முடிந்துள்ளது.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் உயிர் நாடியாக கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு,திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் கீழ் 39 ஆவது பாடசாலை பஸ் நேற்று (03)கல்கமுவ யூ.பி.வன்னிநாயக்க தேசிய பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இதன்போது அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டம் சட்டவிரோதமானது என எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சி அலுவலகத்துக்கும் பொலிஸார் தனிப்பட்ட முறையில் அறிவித்தனர். இந்த அறிவித்தலை நான் உள்ளிட்ட எவரும் பொருட்டாக கொள்ளவில்லை. ஜனநாயக ரீதியாக சுயமாகச் செல்வதற்கும், போராட்டத்துக்குச் செல்வதற்கும், போராட்டம் நடத்துவதற்குமுள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க முடிந்தமை நவம்பர் 02 ஆம் திகதி அடைந்த மாபெரும் வெற்றியாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இந் நாட்டின் மாற்று அரசு ஆகும். தற்போது அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புடன் நடந்துகொள்கின்றது - என்றார்.

## விடுதலைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியம் வழங்கியது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்த மேன்முறையீடு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இலங்கை இராணுவம் இவ்வாறு சாட்சியம் வழங்கியது.

எங்களிடம் புலிகள் சரணடையவில்லை என்று கூறி ஊடகவியலாளரின் தகவல் அறியும் விண்ணப்பத்தை 2019ஆம் ஆண்டும் இராணுவம் மறுத்திருந்தது.

இது தொடர்பான மேன்முறையீடு மூன்று வருடங்களுக்குப் பின்னர் இன்று பரிசீலிக்கப்பட்டது.

போர் இடம்பெற்ற பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அவர்கள் புலிகளா? பொதுமக்களா? என்பது எமக்குத் தெரியாது. நாம் பொறுப்பேற்று கொண்டபோது பதிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. எம்மிடம் வந்தவர்களை ப் பஸ்களில் ஏற்றி புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தின் கட்டுப்பாடுகளில் இருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் சேர்த்தோம். அதன் பின்னர் புனர்வாழ்வு பணியகமே அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும் இராணுவம் சாட்சியம் வழங்கியது.

ஆனால், ஊடகவியலாளர் பா. நிரோஸ் சார்பாக ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணி அ. ஸ்வஸ்திக்கா இதை மறுத்ததோடு இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைந்தமைக்கான ஆதாரங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார். மேலும், புனர்வாழ்வு பணியகத்திடம் இராணுவத்தினம் கூறும் தகவல்கள் இல்லை என்று புனர்வாழ்வுப் பணியகம் வழங்கியுள்ள தகவல்களையும் சட்டத்தரணி அ.ஸ்வஸ்திக்கா ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட ஆணைக்குழு, அரசே இந்த விடயங்களை சர்வதேச அமைப்புக்களுக்குப் பல்வேறு முறை வழங்கியுள்ளது. எனவே, 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இப்போது மறைப்பதற்கு ஒன்றுமில்லை என்று இராணுவத்திடம் அறிவித்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தமைக்கான எழுத்துமூல சமர்ப்பணங்களை 10 நாள்களுக்கு இராணுவத்துக்கு ஊடகவியலாளர் நிரோஸ் வழங்க வேண்டும் என்றும், அதேபோல் இராணுவமும் எழுத்துமூல சமர்ப்பணங்களை விண்ணப்பதாரருக்கு வழங்கவும் என்றும் ஆணைக்குழு உத்தரவிட்டது.

மனு மீள எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி ஆணைக்குழு முன்பாக விசாரிக்கப்படவுள்ளது.

## மக்கள் விரும்பிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் - ராஜபக்ச அரசுக்கு எதிரான எமது போராட்டம் -பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப்பது எமது நோக்கம் அல்ல. அடக்கு முறைகளை உடனடியாக நிறுத்தவே கோருகின்றோம். அடக்குமுறைகள் தொடர்ந்தால் கோட்டாபய ராஜபக்ஷ போல் ரணில் விக்கிரமசிங்கவும் வீட்டுக்கு ஓட வேண்டி வரும்.

நாட்டு மக்கள் விரும்பிய மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. முன்னர் ராஜபக்ச அரசு ஆட்சியில் இருந்தது. தற்போது ரணில் - ராஜபக்ஷ அரசு ஆட்சியில் இருக்கின்றது. இதுவா மாற்றம்? இந்த மாற்றத்தையா மக்கள் விரும்பினார்கள்?

மக்கள் இன்னமும் கொதிநிலையில் தான் இருக்கின்றார்கள். மக்கள் பக்கம் நாமும், எமது பக்கம் மக்களுமாக இருக்கின்றோம். அதேவேளை, ஆர்ப்பாட்டத்தால்தான் 'ஜனாதிபதி கதிரை'யில் தான் அமர்ந்தார் என்பதை ரணில் விக்கிரமசிங்க மறக்கக்கூடாது - என்றார்.

# கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட விவகாரம்; டயனா தாக்கல் செய்த மனு ஒத்திவைப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகேவின் கட்சி உறுப்புரிமையை நீக்கியமைக்கு எதிராக அவர் தாக்கல் செய்திருந்த மனு உச்சநீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை மார்ச் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) அறிவித்துள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்ததையடுத்து, கட்சி உறுப்புரிமையிலிருந்து தாம் நீக்கப்பட்டுள்ளார் என டயனா கமகே தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்தாமல், நேற்று வாகரை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து இன்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தான் ஒரு சதி நடவடிக்கையாகவே பார்க்கின்றார் என்றும், குறிப்பாக வாகரையை முற்றாக அரசுக்குத் தாரைவார்ப்பதற்குரிய நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் சாணக்கியன் எம்.பி. குற்றம் சுமத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இன்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கமாக முன்வைத்தார்.

குறிப்பாக வாகரையில் இறால் வளர்ப்புத் திட்டம் மற்றும் காணிகளை வழங்கும் திட்டங்களில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

அதேபோன்று சேதனப்பசளை என்ற பெயரில் ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன என்றும், இதற்கும் பிள்ளையான் துணைபோகின்றார் என்றும் சாணக்கியன் எம்.பி. சாடினார்.

அத்துடன், அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கான அறிவிப்புகள் தங்களுக்கு முறையாக விடுக்கப்படுவதில்லை என்றும் இதன்போது அவர் விசனம் வெளியிட்டார்.

தான் இந்தக் கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்ற எண்ணத்திலேயே தனக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

எனினும், எந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவும் தான் குரல் கொடுக்கப் பின்னிற்கப்போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேலும் தெரிவித்தார்.

